[21st December 1956

Issue of certified copies of documents by the Revenue authorities in Pudukkotai division

* 397 *Q.*—Sri V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state why supply of certified copies of documents containing false allegations made by village officers against members of the public are refused by the Revenue authorities in Pudukkottai division, Tiruchirappalli district?

The Hon. Sri M. A. MANICKAVELU : An offical communication made by a village officer to his superiors is privileged from disclosure as one made in an official confidence, under Section 124, of the Evidence Act, 1872. Therefore request for certified copies of the documents are refused.

Sri V. BALAKRISHNAN : உத்தியோக முறையில் எழுதப்படுகிற தஸ்தாவேஜுகளில் பொய்யாக எழுதி இருந்தால் அதைப் பாதுகாக்க சலுகை கொடுப்பது நியாயமாகுமா ?

The Hon. Sri M. A MANICKAVELU : அதிலே நியாய அநியாய சமாசாரம் எழவில்லை. ரூல் பிரகாரம் ஒரு ஆபீஸரைப் பற்றி மேல் ஆபீஸர் ரகசியமாகத் தகவல் எழுதினாலும் அது பாதுகாக்கப்படத் தான் வேண்டும்.

Sri V. BALAKRISHNAN : தயவு செய்து நான் கேட்டிருப்பது தனிப் பட்ட நபரைப்பற்றி பொய் குற்றச்சாட்டுகளை எழுதினால் அதற்குப் பாதுகாப்ப அளிப்பது நியாயமா என்பது தான் என்பதைக் கவனிக்கவும். அந்தப் பொய்க் குற்றச்சாட்டுகளை அவர்களுக்கே காட்டி அதற்கு ஆவன செய்யாமல் அதைப் பாதுகாக்கக்கூடாது. உத்யோக விஷயங்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இடையாது.

The Hon. Sri M. A. MANICKAVELU : பொய் விஷயம் மாத்திர மல்ல. அதிலே காதல் விஷயம்கூட எழுதி இருக்கலாம். (சிரிப்பு)

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—POINT OF INFORMATION *RE.*

(1) INTRODUCTION OF TAMIL AS STATE LANGUAGE.

Sri M. KALYANASUNDARAM : (பாயின்ட் ஆப். இன்பர்மேஷன்). கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இன்று எதிர் பாராத வகையில் ஒரு நல்ல செய்தியை பத்திரிகையில் பார்த்தேன். அது எல்லோரும் வரவேற்கக் கூடிய செய்தி தான். கனம் நிதி அமைச்சர் அவர்கள் நேற்று வெளியே ஏதோர் இடத்தில் பேசும் போது இந்த சட்ட சபைக் கூட்டம் முடிவு அடைவதற்குள்ளாகவே தமிழை ஆட்சிமொழியாக்கும் மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றப்போவதாகப் பேசியிருக்கிறார். அதை அவர் முதலில் இந்தச் சட்ட சபையில் அறிவித்திருந்தால் இன்னும் விசேஷமாக இருக்கும். நல்ல விஷயத்தை வெளியிட்டிருப்பதற்காக அவரைப் பாராட்டுகிறேனே தவிர அதனால் நான் வருத்தப்படவில்லை. அவர் தெரிவித்திருக்கும் முறைப்படி இந்தக் கூட்டத்திலேயே தமிழை ஆட்சிமொழியாக்கும் மசோதா கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். உண்மையான விவரம் என்ன, எப்பொழுது அந்த மசோதா இந்தச் சபையின் விவாதத்திற்கு வர இருக்கிறது, என்பன போன்ற விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இது ஒன்றும் புதிய உரை அல்ல. கவர்னர் உரையில் அதைப்பற்றி